**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**
**2015/2016 (செப்ரெம்பர் - 2020)**

# TLS 3123 தொல்காப்பியம் பொருளதிகாரம்

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

முதலாம் பகுதியிலிருந்து **இரு** வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

1.(அ) அகத்திணையியல் நூற்பா வைப்பு முறை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ஆ) அந்நூற்பாக்களை விளங்கிக் கொள்வதிலுள்ள பாட, உரை விளக்கச் சிக்கல்களை ஆராய்க. (10 புள்ளிகள்)

2.(அ) பாடாண்திணை என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

(ஆ) புறத்திணை இலக்கிய மரபில் பாடாண்திணைத் துறைகள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (12 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) உள்ளுறை உவமம், இறைச்சி, ஏனையுவமம்

(ஆ) கைக்கிளை - பெருந்திணை

(இ) நாடக வழக்கு - உலகியல் வழக்கு - புலனெறி வழக்கு

(ஈ) ஆசிரியப்பாவின் தோற்றம், வளர்ச்சி

(உ) தொல்காப்பிய புறத்திணையியலும் புறப்பொருள் வெண்பாமாலையும்

(10×2=புள்ளிகள்)

## பகுதி II

4. அகத்திணையியலை ஆதாரமாகக் கொண்டு தொல்காப்பியரது கவிதைக் கொள்கையை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. புறத்திணைகளாகக் கூறப்படுவன ஒவ்வொன்றையும் அகத்திணை ஒவ்வொன்றினதும் புறமாகத் தொல்காப்பியர் கொள்ளும் முறைமை ஏற்புடைத்தானதா? விளக்குக.

(20 புள்ளிகள்)

6. “வெட்சித் திணைக்குத் தொல்காப்பியர் பதினான்கு துறைகளைக் கூற, நச்சினார்க்கினியர் அவற்றை இருபத்தெட்டாகக் கூறியுள்ளார்,” ஆராய்க. (20 புள்ளிகள்)

**அல்லது**

“உழிஞை தானே மருதத்துப் புறனே” ஆராய்க. (20 புள்ளிகள்)

7. செய்யுளியலில் தொல்காப்பியர் யாப்புப் பற்றியும் அவற்றின் வகைகள் பற்றியும் கூறுவனவற்றைத் தொகுத்துக் கூறுக. (20 புள்ளிகள்)